1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : (அ) மதுரையில் இருந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, தனியாரால் நடத்தப்பட்டதாகும். அக்கல்லூரியில் இறுதியாண்டு (நாலாவதாண்டு) படிப்பின் தரம் சென்னை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் நான்காமாண்டு வகுப்பில் பின்பற்றப்பட்டு வரும் கல்வியின் தரத்தைவிட மிகக் குறைவாக இருந்தது. ஆகையால், அங்கு 4-ம் ஆண்டு படித்த மாணவர்கள் சென்னை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் நான்காமாண்டு வகுப்பில் மீண்டும் சேர்ந்து படித்துத் தேறினால் அவர்களுக்கு உட்பயிற்சி (Internship) வழங்கப்படும்.

(இ) தமிழ்நாடு ஹோமியோபதி குழுவிலிருந்து பட்டம் பெற்றவர்கள் குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

திரு. டி. சந்தோஷம் : அப்படி அரசாங்கக் கல்லூரியில் 4 ஆம் ஆண்டிலே அவர்கள் உறுதியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று உத்தரவாதம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : இந்திய ஓமியோபதி குழுவினரால் சிபாரிசு செய்யப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

Co-operative Spinning Mill Workers

* 30 *Q.*—Thiru M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to remove the disparity in salary paid to the workers working in different Co-operative Spinning Mills in Tamil Nadu;

(*b*) whether the Government have received any representation from the workers that the salary should be paid in a uniform rate; and

(*c*) if so, the action taken thereon ?

கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்கள்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்தில், ஆலைக்கு ஆலை இருக்கும் வேறுபாட்டை அகற்ற அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

(இ) ஒரே சீரான முறையில் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று தொழிலாளர்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா ?

(உ) ஆமெனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : (அ) திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையைத் தவிர மற்ற எல்லா கூட்டுறவு நூற்பாலைகளிலும் ஒரே மாதிரியான சம்பள விகிதங்கள்தான் கொடுக்கப்படுகின்றன.

(இ) & (உ) இதுபற்றிய முறையீடு ஏதும் இதுவரை அரசுக்கு வரவில்லை.

திரு. எம். சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பெரும்பாலான ஊழியர்கள் ரெகுலர் ஆக்கப்படாமல், அவர்களுக்கு தற்காலிக ஊழியர்களுக்குக் கொடுப்பது போல், தினக் கூலிகளுக்குக் கொடுப்பது போல் சம்பளம் கொடுக்கப்படுவதாக குறை சொல்லப்படுகிறது. மற்ற நூற்பாலைகளில் இருப்பதுபோல் இவர்களுக்கும் சீரான சம்பள விகிதம் கிடைக்கும் வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : கன்னியாகுமரி கூட்டுறவு நூற்பாலையைப் பொறுத்தவரை, எதிர்க் கட்சித் தலைவர் கூறுவது போல், இதுவரையில் எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை. அதுமாதிரி நடக்கிறதாக அரசுக்குத் தகவல் வந்தால், அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஆ. பாலசுப்ரமணியம் : இதே போன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே பணி புரிகின்ற ஊழியர்களுக்கும் ஒரே விதமான சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1978 செப்டம்பர் 2]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சேரன் போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த திரு. யூ. எஸ். விசுவநாதன் தீக்காயங்களால் மரணமடைந்தது குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். மேதகு ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு உறுப்பினர் அவர்களுக்கு வாய்ப்பு உள்ளதால், இதற்கு அனுமதி மறுக்கிறேன். மேலும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதுகுறித்து அவைக்கு ஓர் அறிக்கையை அளிக்கவிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஏதேனும் விளக்கம் கேட்க விரும்பினால் அதற்கு நான் அனுமதி தருகிறேன். இதே பொருள் குறித்து திரு. வீராசாமி அவர்களும், திரு. நல்லசிவம் அவர்களும் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். விரும்பினால் அவரும் விளக்கம் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. யூ. எஸ். விசுவநாதன், சேரன் போக்குவரத்துக் கழகத்தில் 6—1—1973 அன்று தினக்கூலியில் வேலைக்கமர்ந்து பின்னர் 1—2—1975 முதல் மாதாந்திர சம்பளத்தில் பணி புரிந்து வந்தார். 30—8—1978 அன்று காலை 5-45 மணிக்கு திரு. விசுவநாதன் பலத்த தீக்காயங்களுடன் உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபொழுது அன்று காலை 5 மணியளவில் தானே தீ வைத்துக்கொண்டதாக அங்கிருந்த மருத்துவரிடம் திரு விசுவநாதன் கூறியதாகவும் அதுபற்றிய குறிப்பினை மருத்துவமனை விபத்து அறிக்கையில் (ஹாஸ்பிட்டல் ஆக்சிடென்ட் ரிப்போர்ட்டில்) அம்மருத்துவர் குறித்துள்ளதாகவும் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரும், மாநில காவல் துறை தலைமை அதிகாரியும் அறிவித்துள்ளனர். இந்நிலையில் வழக்கின் புலன் விசாரணை மிக்க எச்சரிக்கையுடனும் தீவிரமாகவும் நடத்தப்பட்டு வருகிறது. இந்தச் சம்பவம் 30—8—1978 அன்று காலை சுமார் 5-00 மணிக்கு நடந்தது. தீவிர சிகிச்சை அளித்தும் பலனளிக்காமல் அன்று இரவு 8-10 மணிக்கு திரு. விசுவநாதன் காலமானார். இ.பி.கோ. பிரிவு 307-ன்கீழ் காவல் துறையினர் ஒரு வழக்கைப் பதிவு செய்து பின்னர் திரு. விசுவநாதன் இறந்த பிறகு இ.பி.கோ. பிரிவு 302-க்கு அதனை மாற்றி தீவிர விசாரணை செய்து வருகின்றனர். திரு. குமாரவேலு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். திரு. குமாரவேலு சேரன் போக்குவரத்துக் கழகத்தால் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். தலைமறைவாகியுள்ள திரு. கன்னையனை காவல் துறை தேடி வருகிறது. மேற்கொண்டு புலன் விசாரணை கவனமாகவும் தீவிர